بسم الله الرحمن الرحيم نحمده ونصلى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர் காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 9

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

27 ரஜப் 1437 ஹிஜ்ரி கமரி 5 மே 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

எந்த நபரும் தத்துவவாதிகளின் கப்பலில் அமர்ந்தவாறு சந்தேகங்களின் புயலிலிருந்து இரட்சிப்பைப் பெற முடியாது. மாறாக, கண்டிப்பாக அவர் மூழ்கி விடுவார். கலப்பற்ற ஏகத்துவத்தின் பானம் ஒருபோதும் அவருக்கு கிடைக்காது. உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது. உறுதியான முறையில் இறைவன் இருக்கின்றான் என்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதுவே உண்மையான விஷயமாகும். இந்த தூய்மையான, முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

எவர்கள் அப்துல் ஹகீம் கான் கொண்டிருக்கும் கொள்கையைப் போன்று, ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருந்து அல்லது முர்தத் - மார்க்கத்தை துறந்து விட்டு அவர் தவ்ஹீதில் நிலைத்திருந்து இறைவன் ஒருவன் என்றும், அவனுக்கு எதுவும் இணை இல்லை என்றும் அறிந்திருக்கின்றார் என்றால் அவரும் இரட்சிப்பைப் பெற்று விடுவார். நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதால் அல்லது மார்க்கத்தை துறந்து விட்டுச் சென்று விடுவதால் அவர் மீதும் எவ்வித குற்றமும் இருக்காது என்ற தவறான எண்ணத்தில் உறுதியாக நிலைத்திருக்கின்றனரோ அத்தகைய மக்கள் உண்மையில் தவ்ஹீதின் உண்மை நிலையை தெரியாதவர்களாக இருக்கின்றனர். ஷய்த்தானும் கூட இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு எதுவும் இணையில்லை என்றே கருதினான் என்பதை நாம் மீண்டும் மீண்டும் எழுதியுள்ளோம். ஆனால், அவன் ஒருவனாக இருக்கின்றான் என்று கருதுவதால் மட்டும் ஈடேற்றம் கிடைக்க முடியாது. மாறாக, ஈடேற்றம் இரு விஷயங்களில் அடங்கியிருக்கின்றது.

முதலாவதாக, முழுமையான உறுதியுடன் இறைவனின் இருப்பின் மீதும் ஏகத்துவத்தின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, மகிமை மிக்க அந்த ஏக இறைவன் மீதுள்ள முழுமையான அன்பு எந்த அளவு அவரது உள்ளத்தில் நுழைந்து விட வேண்டும் என்றால் அது அவரை ஆட்கொண்டு அது அவரிடம் மிகைத்திருப்பதன் விளைவாக இறைவனுக்கு கட்டுப்படுவது முற்றிலும் அவரது உயிருக்கு சுகத்தை தரக்கூடியதாக ஆகி விட வேண்டும். அது இல்லாமல் அவரால் உயிர் வாழவே முடியாமல் இருக்க வேண்டும். அவன் மீதுள்ள அன்பு மற்ற எல்லார் மீதுள்ள அன்பையும் அழித்து, இல்லாமல் ஆக்கி விட வேண்டும். இதுவே உண்மையான தவ்ஹீது ஆகும். அது நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் கிடைக்க முடியாது. ஏன் அது கிடைக்காது? அதற்கான பதில் இதுவாகும். இறைவன் மறைவிலும் மறைவானவனாகவும் நுட்பத்திலும் நுட்பமானவனாகவும் (கண்களில் இருந்து) மிகவும் மறைந்தும் இருக்கின்றான். அவனை மனித அறிவுகள் தமது வலிமையால் மட்டும் கண்டுபிடித்து விட முடியாது. எந்த அறிவு அளவிலான சான்றும் அவனது இருப்பிற்கான உறுதியான ஆதாரமாக இருக்க முடியாது. ஏனென்றால், இந்த உலகிலுள்ள படைப்புகளைப் பார்த்து அவற்றைப் படைத்தவனின் தேவையை உணரும் அளவில் மட்டுமே அறிவின் ஓட்டமும் முயற்சியும் இருக்கின்றது. ஆனால், தேவையை உணர்வது வேறு விஷயமாகும். எந்த இறைவனின் தேவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அவன் உண்மையிலேயே இருக்கவும் செய்கின்றான் என்று கண்களால் கண்டு ஏற்படுகின்ற உறுதியின் தகுதியை அடைவது என்பது வேறு விஷயமாகும். அறிவின் வழிமுறையானது குறையுள்ளதாகவும் முழுமையடையாமலும் சந்தேகத்திற்குரியதாகவும் இருப்பதால் ஒவ்வொரு தத்துவவாதியும் அறிவின் மூலமாக மட்டும் இறைவனை அடையாளங்கண்டு கொள்ள முடியாது. மாறாக, அறிவின் மூலமாக மட்டும் இறைவனைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகின்ற அத்தகைய மக்களில் பெரும்பாலார் இறுதியில் நாத்திகர்களாக ஆகி விடுகின்றனர். விண்ணிலும் மண்ணிலும் படைக்கப்பட்டுள்ளவற்றைப் பற்றி சிந்திப்பது அவர்களுக்கு எந்தப் பலனையும் தருவதில்லை. அவர்கள் இறைவனின் சிறப்பான அடியார்களை எள்ளி நகையாடி பரிகாசம் செய்கின்றனர். நமக்கு எந்தப் பலனையும் தராத ஆயிரக்கணக்கான அத்தகைய பொருள்கள் உலகில் இருக்கின்றன. அவற்றில் நமது அறிவின் ஆராய்ச்சியினால் படைத்தவன் இருக்கின்றான் என்பதற்கு ஆதாரமாகத் திகழ்கின்ற எந்த ஒரு படைப்பும் இருப்பதாக நிரூபணமாகவில்லை. மாறாக, முழுக்க முழுக்க வீணானவையாகவும் பொய்யானவையாகவும் அவை உள்ளன என்பது அவர்களின் ஆதாரமாக இருக்கின்றது. வேதனை என்னவென்றால், ஒரு பொருளைப் பற்றிய அறிவு இல்லாமல் இருப்பதால் அந்த பொருளே இருக்க முடியாது என்பது கட்டாயம் அல்ல என்பது அந்த அறிவற்றவர்களுக்கு தெரியாது. இந்த வகையிலுள்ள மக்கள் இந்தக் காலத்தில் பல இலட்சக்கணக்கில் உள்ளனர். அவர்கள் தம்மை முதல் தகுதியிலுள்ள அறிவாளிகள் என்றும், தத்துவவாதிகள் என்றும் கருதிக் கொள்கின்றனர். அவர்கள் இறைவன் இருக்கின்றான் என்பதை கடுமையாக மறுப்பவர்களாக இருக்கின்றனர். ஏதாவதொரு வலுவான அறிவுப்பூர்வமான ஆதாரம் அவர்களுக்கு கிடைத்திருந்தால் அவர்கள் இறைவன் இருக்கின்றான் என்பதை மறுத்திருக்க மாட்டார்கள். மேலும் மகிமை

(தொடர்ச்சி 7-வது பக்கம்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது எழுத்துக்கள், சொற்பொழிவுகள் மற்றும் சபைகளில் சில விஷயங்களை உதாரணத்துடன் கூறினார்கள். அவை நமது சஹாபாக்களின் அறிவிப்புகள் மூலம் நமக்கு கிடைக்கின்றன. ஆனால் எல்லாவற்றிலும் அதிகமாக நம் மீது செய்த பெரும் கருணை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நம் மீது செய்துள்ள பேரருள் என்னவென்றால், அன்னார் தமது குத்பாக்கள் மற்றும் பேச்சுக்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய கருத்துக்களை விளக்கினார்கள். பொதுவாக அவை, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தாமே பார்த்ததும் கேட்டதும் அல்லது நெருக்கமான சஹாபாக்கள் அவர்களுக்கு கூறியவையும் ஆகும். நான் கடந்த சில காலமாக இந்தக் கருத்துக்கள் மற்றும் அறிவிப்புகளை குத்பாவில் விளக்கி வருகிறேன். அது குறித்து எனக்கு பல கடிதங்களும் வந்துள்ளன. இந்த உதாரணங்கள் மற்றும் சம்பவங்களின் மூலம் கருத்துக்கள் எங்களுக்கு எளிதாக புரிகின்றன என்று அதில் எழுதுகின்றனர். எவ்வாறிருப்பினும், இந்த அடிப்படையிலேயே இன்றைய குத்பாவும் அமைந்துள்ளது.

தற்காலத்தில் இஸ்லாமிய நாடுகளில் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள் நடக்கின்றன. ஷெய்த்தானிய சக்திகள் பின்னால் நின்று வேலை செய்கிற இடங்களைத் தவிர பிற இடங்களில் பொதுவாக பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்காததன் காரணத்தால்தான் நிம்மதியற்ற நிலை உருவாகின்றது.

உங்கள் சோம்பலுக்கான காரணத்தை நோயுடன் தொடர்புபடுத்திக் கூறாதீர்கள். எனவே, சோம்பல் காட்டக் கூடியவர்கள் தமது கடமையை நிறைவேற்றுவதில் கவனமில்லாமல் செயல்படுகின்றனர். அவர்களுக்கு ஏற்பட்டது உடலின் மலேரியா அல்ல. மாறாக, உள்ளத்தின் மலேரியாவாகும்.

நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று முடிவு செய்து விட்டால் இந்த எல்லா சோம்பல்களும் விலகி விடுகின்றன.

சில கணவன்மார்கள் மஹரை தருவது ஒருபுறமிருக்கட்டும். அப்பெண் தாமே சாம்பாதிக்கிற பணத்திற்கும் கூட கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். நீங்கள் எம்மிடம் கேட்காமல் செலவு செய்யக் கூடாது என்கின்றனர். அல்லது வருமானத்தை என்னிடம் தாருங்கள். அல்லது வருமானத்தில் இத்தனை சதவீதத்தை தாருங்கள். அது எனது வங்கிக் கணக்கிற்கு வர வேண்டும் என்கிறார்கள். இது முற்றிலும் ஆகுமானதல்ல. இதுபோன்று சில ஏழை குடும்பங்களில் மற்றும் ஏழை நாடுகளில் ஒரு நடைமுறை உள்ளது. பெற்றோர் திருமண வேளையில் மஹரை மகளின் கணவரிடமிருந்தோ அல்லது மாப்பிள்ளை வீட்டாரிடம் இருந்தோ தாமே வசூல் செய்து கொள்கின்றனர். பெண்ணுக்கு சிறிதும் கிடைப்பதில்லை. மணமகள் வெறும் கையுடன் இருக்கின்றாள். இதுவும் தவறான நடைமுறையாகும்.

சிலரது கடமை, மார்க்கத்திற்காக மட்டுமே அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களை அந்த வேலைக்காகவே படைத்துள்ளான். ஆனால் உலகிலுள்ள பிற மக்கள் சந்தேகமின்றி உலகை சம்பாதிக்கட்டும். பிறகு தமது பொருள், நேரம் ஆகியவற்றில் சில பங்கை இறை வணக்கம் மற்றும் மார்க்கப் பணிகளில் செலவிட வேண்டும். இஸ்திஃபார் செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும்.

ஒரு விஷயம் நமது போதனை மற்றும் நமது நடைமுறைக்கு மாற்றமாக இருக்கும் எனில் அதிலிருந்து நாம் தப்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். எந்த விஷயத்திலாவது காப்பியடிக்க வேண்டும் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் முன்மாதிரி என்று அல்லாஹ் கூறுகின்றான். அன்னாரைப் போன்றே செய்ய வேண்டும். அல்லது இக்காலத்தில் நமக்கு முன்மாதிரியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருக்கிறார்கள். அன்னார் தமது எஜமானரிடமிருந்து கற்று நமக்கு கூறியுள்ளார்கள். அதற்கேற்ப நாம் செல்ல வேண்டும்.

திருமணத்தின் அசல் நோக்கம் உள்ளத்தின் அமைதி, சந்ததிகள் நிலைக்கச் செய்தல் ஆகும். அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேட்க வேண்டும். அல்லாஹ்வின் பார்வையில் சிறந்ததாக இருந்தால் நடக்கட்டும். இல்லையென்றால் அது உள்ளத்தை விட்டு அகன்று விடட்டும். உலகத்தின் மீதுள்ள நேசங்களும் தற்காலிக நேசங்களாகும். உலக நேசத்தையும் கூட அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காகவே கேட்க வேண்டும். பிறகு இது நடக்கும் என்றால் பிறகு உலகியல் அன்பும் கூட நன்மையாகி விடும். பிறகு உள்ளத்தின் அமைதி மற்றும் நிறைவுக்கு அது காரணமாக அமையும்.

கிளாஸ்கோவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஸய்யிது நயீம் ஷா சாஹிப் அவர்களின் மகனான ஸய்யிது அஸதுல் இஸ்லாம் ஷா சாஹிப் அவர்கள் ஷஹீதாகி விட்டடார்கள். ஷஹீது மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 1 ஏப்ரல் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் 1 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۔

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு மேற்கோளைப் படித்தேன். அதில் அன்னார் கூறியிருந்தார்கள். என் காலத்தில் பிறந்ததற்காக நீங்கள் மகிழ்ச்சி அடையுங்கள். இக்காலத்தில் அல்லாஹ் உங்களை பிறக்கச் செய்து, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்த நற்பேறு பெற்றவர்களுடன் இணைத்துள்ளான். அவரை எதிர்பார்த்து எதிர்பார்த்து எத்தனையோ சமுதாயங்கள் சென்று விட்டன. கருத்து இதுதன். இதனை நான் எனது வார்த்தையில் கூறியிருக்கிறேன்.

அஹ்மதிகளாகிய நாம் நிச்சயமாக நற்பேறு பெற்றவர்களாவோம். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுபவர்களுடன் இணைந்துள்ளோம். மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலம் கிடைத்தும் கூட பைஅத் செய்ய வாய்ப்பு கிடைக்கப் பெறாத பேரிழந்தவர்களில் இல்லாமல் ஆனோம். அவர்களில் சிலர் இந்தப் பேரிழப்புடன் எதிர்ப்பிலும் கூட வளர்ந்திருக்கிறார்கள். இவ்வாறு அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் வழிகாட்டலை விட்டு விலகி தடம் புரண்டு போய் இருக்கின்றனர்; சிதறுண்டு போய் விட்டனர். எனவே, நாம் இதற்காக அல்லாஹ்வுக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அது குறைவே. அவன் நம்மை நேர்வழியின் பக்கம் வழிகாட்டினான். நமக்கு வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுகின்ற கேள்விகள் மற்றும் விவகாரங்களுக்கு சரியான இஸ்லாமிய போதனைக்கேற்ப தீர்வும் கூட தனது தேர்ந்தெடுக்கப்பட்ட இமாம் மூலமாக வழங்கினான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது எழுத்துக்கள், சொற்பொழிவுகள் மற்றும் சபைகளில் சில விஷயங்களை உதாரணத்துடன் கூறினார்கள். அவை நமது சஹாபாக்களின் அறிவிப்புகள் மூலம் நமக்கு கிடைக்கின்றன. ஆனால் எல்லாவற்றிலும் அதிகமாக நம் மீது செய்த பெரும் கருணை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நம் மீது செய்துள்ள பேரருள் என்னவென்றால், அன்னார் தமது குத்பாக்கள் மற்றும் பேச்சுக்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய கருத்துக்களை விளக்கினார்கள்.

பொதுவாக அவை, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தாமே பார்த்ததும் கேட்டதும் அல்லது நெருக்கமான சஹாபாக்கள் அவர்களுக்கு கூறியவையும் ஆகும். நான் கடந்த சில காலமாக இந்தக் கருத்துக்கள் மற்றும் அறிவிப்புகளை குத்பாவில் விளக்கி வருகிறேன். அது குறித்து எனக்கு பல கடிதங்களும் வந்துள்ளன. இந்த உதாரணங்கள் மற்றும் சம்பவங்களின் மூலம் கருத்துக்கள் எமக்கு எளிதாக புரிகின்றன என்று அதில் எழுதுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், இந்த அடிப்படையிலேயே இன்றைய குத்பாவும் அமைந்துள்ளது. ஒரு குத்பாவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இக்கருத்தைக் கூறினார்கள். ஆர்ப்பாட்டம் அல்லது வேலை நிறுத்தம் அனுமதிக்கப்பட்டதா? இல்லையா? என்பதை கூறினார்கள். இது சம்பந்தமாக ஆர்ப்பாட்டங்கள் ஏன் நடக்கின்றன? என்ற அடிப்படையான ஒரு விஷயத்தைப் பார்க்க வேண்டும். அதன் அடிப்படைக் காரணம் என்ன? அது, உரிமைகள் தரப்படவில்லை என்பதே ஆகும். உலகியல் அமைப்பில் உரிமையாளர் தொழிலாளர்களின் உரிமையை தருவதில்லை. தொழிலாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் உரிமையாளரின் உரிமையை தருவதில்லை. இவ்வாறு ஒரு நிம்மதியின்மை உருவாகிறது. சில வேளைகளில் அரசு, குடிமக்களின் உரிமையை தருவதில்லை. சில வேளை குடிமக்கள் அரசின் உரிமையை தருவதில்லை. உரிமையாளர் மற்றும் அரசு, உரிமையை வழங்காத போது ஒரு எதிர்நடவடிக்கை உருவாகுவது வெளிப்படையாகும். ஆனால் தொழிலாளர்களும் குடிமக்களும் தமது உரிமையை வழங்காத போது அவர்கள் மீது கடுமை காட்டப்படுகிறது. இது உலகியல் பணிகளில் உள்ள ஷய்த்தானிய சூழ்ச்சியாகும். அதில் மனிதன் சிக்குண்டிருக்கிறான். எனவே, இஸ்லாமிய போதனையாவது நீங்கள் மற்றவருக்கு அன்னியராக இருக்காதீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாகி உங்கள் உரிமையை வழங்க முயற்சி செய்யுங்கள். இதனால் உலகியல் அமைப்பு ஒருபோதும் கெடாமல் இருக்கும். இது இஸ்லாமிய போதனைகள் மற்றும் இஸ்லாமிய பயன்பாட்டின் சுருக்கமாகும். இது இஸ்லாமிய அரசுகளுடன் மட்டும் தொடர்புடைய விஷயம் அல்ல. மாறாக, பொதுவான உலகியல் அரசுகளிலும் கூட தமது உரிமையை வழங்கியவாறு பணியாற்ற வேண்டும். உரிமையைப் பெறுவதைப் பொருத்தவரை அவ்விடத்தில் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு பதிலாக, சட்டத்திற்குப் புறம்பான வழிமுறைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

எவ்வாறிருப்பினும், இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "இஸ்லாமியப் பண்பாடு என்ற அமைப்பின் அடிப்படை நீதி மற்றும் அன்பு ஆகும். எனவே தமது உரிமைகளைப் பெறுவதற்கும் கூட நீதி மற்றும் அன்பை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளையே மேற்கொள்ள வேண்டும். இந்தக் காரணத்தால்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் எப்போதாவது வேலை நிறுத்தம் நடைபெற்றால் அதில் ஏதாவது அஹ்மதி கலந்து கொண்டால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு கடுமையாகத் தண்டனை தருவார்கள்; அவர் மீது தமது கோபத்தை வெளிப்படுத்துவார்கள்." (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 133)

தற்காலத்தில் இஸ்லாமிய நாடுகளில் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள் நடக்கின்றன. ஷெய்த்தானிய சக்திகள் பின்னால் நின்று வேலை செய்கிற இடங்களைத் தவிர பிற இடங்களில் பொதுவாக பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்காததன் காரணத்தால்தான் நிம்மதியற்ற நிலை உருவாகின்றது. அரசு நீதியின் அடிப்படையில் நிர்வாகத்தை நடத்தினால் குழப்பத்தைப் பரப்புகிற ஷெய்த்தானிய ஆற்றல்கள் அல்லது வெளிப்புற ஆற்றல்கள் குழப்பத்தை பரப்புவதற்கு வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும். ஏனென்றால், பொதுமக்களின் உரிமைகள் வழங்கப்பட்டால் எவரும் ஒரு மவ்லவிக்குப் பின்னாலோ அல்லது ஒரு குழப்பவாதி அல்லது ஏதேனும் விஷமம் செய்பவர் அல்லது ஏதேனும் கிளர்ச்சிக்காரர் ஆகியோரின் பின்னால் செல்ல மாட்டார்கள்.

அல்லாஹ் முஸ்லிம் நாடுகளின் அரசுகளுக்கு, குறிப்பாக பாகிஸ்தான் அரசுக்கு அறிவை வழங்குவானாக! அவர்கள் தமது குடிமக்களின் உரிமையை வழங்குவார்களாக! இதுபோன்று ஒவ்வோர் அஹ்மதியும் வலுக்கட்டாயமாக அதுபோன்ற நிகழ்ச்சிகளில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யப்படும்போது துஆ செய்தவாறு சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்காமலும் அரசின் பொருட்களை சேதப்படுத்தும் செயல்களைச் செய்யாமலும் நடந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு பணியுடன் தன்னை இணைத்துக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு மனிதரும் தமது பணியில் ஆர்வம் உடையவராக இருப்பார் எனில் அவர் தமது முழு ஆற்றல்களையும் பயன்படுத்தியவாறு அதனை செய்வதற்கு முயற்சி செய்கிறார். இது பொதுவான ஒன்றாகும். இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் ஊர் உதாரணம் தந்துள்ளார்கள்.

ஓர் இராணுவ வீரர் அல்லது தளபதி அல்லது ஆசிரியர் அல்லது நீதிபதி அல்லது வழக்கறிஞர் அல்லது வியாபாரி அல்லது சட்டமன்ற செயலர் அல்லது சபாநாயகர் அல்லது அரசின் அமைச்சர் எவராக இருந்தாலும் ஒரு நம்பிக்கையாளரைப் போன்று பணி செய்வார் எனில் உளப்பூர்வமாகப் பணி செய்வார் எனில் முழுமையாக நேரத்தை தருவார் எனில், மாலையில் களைத்துப்போய் அமர்ந்து நாள் முழுவதும் வேலை செய்து களைத்து எனது முதுகே ஒடிந்து விட்டது என்று கூறுகிறார். ஆனால், நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பார்க்கிறோம். அன்னார் நமக்காக முன்மாதிரியை எடுத்து வைத்துள்ளார்கள். அன்னாரது நடைமுறையாவது உலகின் பல்வேறு துறைகளுடன் தொடர்புடையவர்கள் செய்கிற எல்லா பணிகளையும் விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்த பணிகள் அதிகமாகவே தென்படுகின்றன. அன்னார் நீதிபதியாகவும் இருந்தார்கள். அன்னார் ஆசிரியராகவும் இருந்தார்கள். அன்னார் பிற அரசு கடமைகளையும் நிறைவேற்றினார்கள். ஏனெனில் அவர்கள் அரசின் தலைமைப் பொறுப்பில் இருந்தார்கள். சட்டங்களை இயற்றி அல்லது அதனை விவரித்தும் தெளிவாக எடுத்துக் கூறியும் வந்தார்கள். ஆனால் அத்துடன் வீட்டு வேலைகளையும் கூட செய்தார்கள். மனைவியருக்கு உதவியும் செய்தார்கள். நான் எவ்வளவு வேலைப்பளு உள்ளவன். வீட்டில் உங்கள் பணிகளில் என்னால் உதவி செய்ய முடியாது என்று ஒருபோதும் கூறியதில்லை.

இதனை இன்னும் விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: "பாருங்கள். ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் தமது மனைவியரின் உரிமையையும் வழங்கினார்கள். எவ்வளவு கவனத்துடன் வழங்கினார்கள் எனில் ஒவ்வொரு மனைவியரும் தாம்தான் அன்னாரின் முழு கவனத்தில் இருக்கின்றேன் என்று கருதினார்கள். பிறகு மனைவி ஒருவரல்ல. ஒன்பது மனைவியர் இருந்தனர். ஒன்பது மனைவியர் இருந்தும் கூட ஒரு மனைவி கூட என் மீது கவனம் செலுத்தப்படவில்லை என்று கருதவில்லை. இந்த வகையில் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழக்கமாவது அன்னார் எல்லா மனைவியரின் வீட்டிற்கும் செல்வார்கள். அவர்களின் தேவைகளை விசாரிப்பார்கள். சில வேளைகளில் அவர்களின் வீட்டு வேலைகளில் அவர்களுக்கு உதவியும் செய்வார்கள். கூறப்பட்ட இந்த அதிகமான பணிகளுக்கு பிறகு இன்னும் ஏராளமான பணிகள் அவர்களுக்கு இருந்தன. அவற்றையும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் நிறைவேற்றி வந்தார்கள். அன்னாரின் வாழ்வின் ஒரு நொடி கூட பணியற்றதாக இருந்ததில்லை. ஆனால் அன்னாரும் மலேரியா நோய் பரவி இருக்கக்கூடிய நாடு என்றழைக்கப்படும் நாட்டில்தான் வாழ்ந்தார்கள்."

ஏனெனில் ஆசியா, ஆப்பிரிக்கா இன்னும் அதிகமான நாடுகளில் வாழ்பவர்கள் தமது சோம்பலுக்கும், பணி செய்யாமைக்கும் அத்தகைய ஊரில் வாழ்வதுதான் காரணம் என்று கூறுகின்றனர். இது மலேரியா பரவியுள்ள பகுதியாகும். சோம்பல் உருவாகிறது. பல்வேறு நோய்கள் உருவாகின்றன என்று காரணம் கூறுகின்றனர். அதனால் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த மலேரியாவின் உதாரணத்தை கூறுகின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அதே பகுதிகளில் வாழ்ந்த போதிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதிகமான பணிகள் செய்தார்கள். ஆசியா மற்றும் ஆப்பிரிக்க மக்கள் சில சாக்குப்போக்குகளை இவ்வாறு கூறுகின்றனர். எங்களது சோம்பலுக்கும், பணி செய்யாமைக்கும் காரணம் நோயாகும் என்கின்றனர். இதே காரணங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்த பகுதியிலும் இருந்தன.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்திருக்கின்றோம். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் நிழலாக இருந்தார்கள். அவர்களுடைய பணியின் நிலை எவ்வாறிருந்தது எனில் நாங்கள் தூங்கும்போது அன்னார் பணி செய்து கொண்டிருக்கக் கண்டோம். எங்கள் கண்கள் எப்போது திறந்தாலும் அப்போதும் அன்னார் பணி செய்து கொண்டிருப்பதையே பார்ப்போம். இவ்வளவு உழைப்பும் முயற்சியும் செய்த போதிலும், அவர்களது நூல்களை புரூஃப் பார்க்கிற அன்னாரது நண்பர்கள் வரும்போது அவர்களின் பணிக்கு எவ்வளவு மதிப்பு கொடுப்பார்கள் எனில் எவராவது இஷா நேரத்தில் ஹுஸூர்! நான் புரூஃப் எடுத்து வந்துள்ளேன் என்று குரல் கொடுத்தாலும் அன்னார் கட்டிலிலிருந்து எழுந்து வாசலுக்கு சென்று பலமுறை ஜஸாகல்லாஹ் உங்களுக்கு சிரமம் ஆகி விட்டது. ஜஸாகல்லாஹ். உங்களுக்கு நிறைய சிரமம் ஆகி விட்டது என்று கூறிக் கொண்டே செல்வார்கள். ஆனால் புரூஃப் ரீடிங் செய்பவர்களின் பணி அன்னார் செய்கின்ற பணிக்கு முன் ஒன்றுமே இல்லை.

சுருக்கமாக, நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இந்த அளவுக்கு பணி செய்யும் பழக்கத்தைப் பார்த்துள்ளோம். இதனால் எமக்கு வியப்பு ஏற்பட்டது. நோயின் காரணமாக அன்னார் சில வேளை உலாவ வேண்டியதிருந்தது. இந்நிலையிலும் அன்னார் பணி செய்து வந்தார்கள். நடப்பதற்காக சென்றால் வழியிலும் மார்க்க விவகாரங்களைப் பற்றி குறிப்பிடுவார்கள். கேள்விகளுக்குப் பதில் தருவார்கள். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதே மலேரியாவின் பகுதிகளில் வாழ்ந்தவர்கள்தான்."

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 249)

எனவே, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் சோம்பலுக்கான காரணத்தை நோயுடன் தொடர்புபடுத்திக் கூறாதீர்கள். எனவே, சோம்பல் காட்டக் கூடியவர்கள் தமது கடமையை நிறைவேற்றுவதில்

கவனமில்லாமல் செயல்படுகின்றனர். அவர்களுக்கு ஏற்பட்டது உடலின் மலேரியா அல்ல. மாறாக, உள்ளத்தின் மலேரியாவாகும். நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று முடிவு செய்து விட்டால் இந்த எல்லா சோம்பல்களும் விலகி விடுகின்றன. மலேரியாவின் பகுதிகள் ஒருபக்கம் இருக்கட்டும். இங்கு ஐரோப்பாவிலும் சரி சிலர் வீட்டிலேயே எல்லா நேரமும் இருக்கிறார்கள். தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள் அல்லது மனைவியுடன் சண்டை சச்சரவு இருந்து வருகிறது. பிள்ளைகளையும் கஷ்டப்படுத்துகிற முறையில் நடந்து கொள்கின்றனர். அவர்களுக்கு நோயில்லை. நோய் என்று கூறுவது சாக்குப் போக்காகும். இது சோம்பல் ஆகும். ஏனெனில் வருமானம் குறித்த கவலையில்லை. அவர்களின் வாழ்வாதாரத்திற்கு சலுகை கிடைக்கிறது. அவர்கள் சாக்குப்போக்கு கூறி பணி செய்வதில்லை. இந்த சோம்பலை இங்கு வாழ்பவர்களும் அகற்ற வேண்டும். பிறகு இஸ்லாம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க பல்வேறு வழிமுறைகளைக் கூறியுள்ளது. ஒன்று, அவர்களுக்கு திருமணம் நிகழும் போது மஹர் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, அதனை வழங்க வேண்டும். தலாக் அல்லது பிரிவு ஏற்படும் நிலையில் தான் மஹர் தொகையை வழங்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர்.

மஹரின் நோக்கம் என்ன? நோக்கம் என்னவென்றால் அத்தொகை மணமகளிடம் இருக்க வேண்டும். அவர்களுக்கு ஏதேனும் தேவை அல்லது குறிப்பிட்ட செலவுகள் வந்து விட்டால் அவர்கள் அதற்காக கணவரிடம் கேட்பதற்குக் கூட வெட்கப்படலாம். எனவே, அவர்கள் அதிலிருந்து செலவு செய்ய வேண்டும். அல்லது சில நேரங்களில் எத்தகைய தேவை வந்து விடுகிறது என்றால் அந்த நேரத்தில் கணவரால் அதனை நிறைவேற்ற வேற்ற முடியாமல் போகிறது. அவ்வேளையில் பெண்களிடம் பணம் இருந்தால் செலவு செய்து கொள்வர். அல்லது மஹரை கொடுக்கப்பட போவதில்லை என்றால் அல்லது வேறு சூழ்நிலையில் இதனை நிறைவேற்ற முடியாமல் போய் விடுகிறது. உதாரணமாக, பெண்கள் வேறு யாருக்காவது உதவி செய்ய விரும்புகிறார்கள் அல்லது தமது உறவினருக்கு உதவி செய்ய விரும்புகிறார்கள். அதனை கணவரிடம் கூற விரும்பவில்லை எனில் அவர்களிடம் கொஞ்சம் பணம் இருக்க வேண்டும். அப்போது தமது தேவைகளுக்கான செலவுகளை செய்ய இயலும். சில கணவன்மார்கள் மஹரை தருவது ஒருபுறமிருக்கட்டும். அப்பெண் தாமே சாம்பாதிக்கிற பணத்திற்கும் கூட கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். நீங்கள் எங்களிடம் கேட்காமல் செலவு செய்யக் கூடாது என்கின்றனர். அல்லது வருமானத்தை என்னிடம் தாருங்கள். அல்லது வருமானத்தில் இத்தனை சதவீதத்தை தாருங்கள். அது எங்களின் வங்கிக் கணக்கிற்கு வர வேண்டும் என்கிறார்கள். இது முற்றிலும் ஆகுமானதல்ல.

இதுபோன்று சில ஏழை குடும்பங்களில் மற்றும் ஏழை நாடுகளில் ஒரு நடைமுறை உள்ளது. பெற்றோர் திருமண வேளையில் மஹரை மகளின் கணவரிடமிருந்தோ அல்லது மாப்பிள்ளை வீட்டாரிடம் இருந்தோ தாமே வசூல் செய்து கொள்கின்றனர். பெண்ணுக்கு சிறிதும் கிடைப்பதில்லை. மணமகள் வெறும் கையுடன் இருக்கின்றாள். இதுவும் தவறான நடைமுறையாகும். இது பெண் மக்களை விற்கும் விஷயமாகும். இதனை இஸ்லாம் கடுமையாகத் தடுக்கிறது. இதுபோன்று சில வேளைகளில் பெண்கள் தமது கணவர்களின் மஹரை மன்னித்து விடுகிறார்கள். ஆனால் இதற்கும் சில நிபந்தனைகள் உள்ளன. அவர்களின் கையில் வைத்து விட்டு பிறகு கேட்க வேண்டும். இன்னும் சொல்வதாயின், ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் சில இமாம்கள் மற்றும் பெரியவர்களின் தீர்ப்பாவது, பெண்களின் மஹரை தந்து விடுங்கள். பிறகு ஒரு வருடம் அதனை அவர்களிடம் கொடுத்து வைக்க வேண்டும். பிறகு அவர்கள் விரும்பினால் திருப்பித் தரலாம். அவர்களிடம் தந்து விட்ட பிறகு அவர்கள் விரும்பினால் அவர்கள் அத்தொகையை வைத்துக் கொள்ளலாம் அல்லது மன்னித்து விட்டு திருப்பித் தர விரும்பினால் தந்து விடலாம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அத்தகைய மஹரை திருப்பித் தருவது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சஹாபியின் சம்பவம் ஒன்றை இவ்வாறு கூறுகின்றார்கள்: ''நமது இயக்கத்தில் ஹக்கீம் ஃபழ்லுத்தீன் சாஹிப் அவர்கள் ஆரம்ப காலத்தில் தியாகம் செய்வதில் முந்தி விட்டவர்களுள் ஒருவராவார். அவருக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். மஹர் ஷரீஅத்தின் கட்டளையாகும். நிச்சயமாக பெண்களுக்கு அதனை தர வேண்டும். உடனே ஹக்கீம் சாஹிப் கூறினார்கள். எனது மனைவியர் அதனை மன்னித்து விட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், அவர்களின் கையில் தந்து மன்னிப்பை பெற்று விட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், இல்லை ஹுஸூர்! நான் கூறியதும் அவர்கள் மன்னித்து விட்டார்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். முதலில் நீங்கள் அவர்களின் மடியில் இப்பணத்தை போடுங்கள். பிறகு அதனை அவர்களிடம் மன்னிக்க வையுங்கள்.'' (இதுவும் கூட தாழ்ந்த நிலையாகும். அசல் விஷயமாவது பணம் குறைந்தபட்சம் பெண்களிடம் ஒரு வருடம் இருக்க வேண்டும். அந்த காலத்திற்குப் பிறகு அவர்கள் மன்னித்தால் சரி. ) ''அவருக்கோ இரு மனைவியர் இருந்தனர். மஹர் 500 – 500 ரூபாய்களாக இருந்தன. ஹகீம் சாஹிப் எங்கிருந்தோ கடன் வாங்கி 500 – 500 அவர்களிடம் தந்து விட்டார்கள். கொடுத்து விட்டு, நீங்கள் என்னிடம் உங்கள் மஹரை மன்னித்து விட்டீர்கள். நினைவு இருக்கிறதா? எனவே இப்போது எனக்கு அதனை திருப்பித் தந்து விடுங்கள் என்றார்கள். உடனே அம்மனைவியர், நீங்கள் தரப் போகிறீர்கள் என்று அப்போது எங்களுக்கு என்ன தெரியும்? எனவே நாங்கள் மன்னித்து விட்டதாக கூறினோம். இப்போது நாங்கள் தரமாட்டோம் (இப்போது தான் அது எங்களிடம் வந்து விட்டதே) என்றனர். ஹக்கீம் சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இந்த சம்பவத்தைக் கூறினார்கள். பணம் எனக்கு திரும்ப கிடைத்து விடும் என்ற எண்ணத்தில் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி (இரண்டு மனைவிகளுக்கும்) மஹர் கொடுத்து விட்டேன். ஆனால் பணத்தை வாங்கியதும் திருப்பித் தர மறுத்து விட்டார்கள் என்று கூறினார். ஹஸ்ரத் சாஹிப் அதனைக் கேட்டு மிகவும் சிரித்தார்கள். இதுதான் சரியானது. முதலில் பெண்களுக்கு மஹரை கொடுக்க வேண்டும். சிறிது காலத்திற்குப் பிறகு அவர்கள் மன்னிக்க விரும்பினால் மன்னிக்கட்டும். அது அல்லாமல் பணத்தைக் கொடுக்காமல் மன்னிக்க வைப்பது, உழைப்பின்றி பலன் பெறுவது போன்றதாகும். அதாவது எந்த உழைப்பும் இல்லாமல் கருணையைப் பெறுவதாகும் என்று கூறினார்கள்.

இவர் மஹர் தரவும் இல்லை. தரப்போவதுமில்லை. போகட்டும் மன்னித்து விடுவோம் என்று பெண்க்ள் நினைக்கின்றனர். இது இலவச பேருபகாரமாகும். பெண்களுக்கு மஹர் கிடைத்து விட்டால் பிறகு மகிழ்ச்சியுடன் திருப்பித் தந்தால் சரி அது அல்லாமல் பெண்களுக்கு 10 இலட்சம் ரூபாய் தான் மஹராக இருந்தாலும் அது கிடைக்காவிட்டால் அவர் தரப்போவதில்லை. வெறும் வாயளவில் தான் கூறப்படுகிறது. சட்டைப் பையிலிருந்து தரப் போவதில்லை என்று அப்பெண் அறிகிறார். வெறும் வாயளவில் சொல்லத்தானே போகிறோம். இதில் எவ்வித குற்றமும் இல்லை என்று பெண்கள் நினைக்கின்றனர். எனவே, பெண்களிடம் மன்னிப்பை வாங்கும் முன் அவர்களிடம் மஹர் தரப்படுவது அவசியமாகும். மஹரின் தேவை அறியப்படாத வேளையில் அப்பணம் தரப்படுகிறது. சில வேளை என்ன தேவை ஏற்படும் என்று பெண்களுக்கு எதுவும் தெரியாது. அல்லது பெற்றோர் அவர்களிடமிருந்து அப்பணத்தை வாங்க நினைத்தால் அது அனுமதிக்கப்பட்டதல்ல. (நான் சில உதாரணங்களைத் தந்தேன். பெற்றோர் தமது மகளின் மஹரை தாமே வாங்கி விடுகின்றனர். இது அனுமதிக்கப்படாத விஷயமாகும்.) இது ஒருபோதும் சரியல்ல. இது திரையிட்டு விஷயத்தை மறைப்பதாகும். இது எவ்வகையிலும் சரியானதல்ல.''

(குத்பாத்தே மஹ்முது தொகுதி 9, பக்கம் 217)

பிறகு ஸக்காத். இதுவும் கடமைகளில் அடங்கும். எவரிடம் ஸக்காத் கொடுக்க வேண்டிய நிபந்தனைகள் முழுமை அடைந்து விடுகின்றதோ அவர் கொடுக்க வேண்டும். ஆனால் சில பெரியவர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு தான் செல்வம் இருந்தாலும் வருமானம் வந்தாலும் அல்லாஹ்வின் வழியில் அவை அனைத்தையும் செலவு செய்து விடுகிறார்கள். அவ்வாறே ஒரு பெரியவரின் கதையை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அதில் எந்த சந்தேகமும் இல்லை. சில பெரியவர்கள் இருக்கின்றனர். இறைவன் அவர்களை மக்களுக்கு முன்மாதிரியாக அனுப்பி இருக்கின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நானே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து கேட்டுள்ளேன். ஒருவர், ஒரு பெரியவரிடம் எத்தனை ரூபாய்க்கு ஸக்காத் கொடுக்க வேண்டும்? என்று கேட்டார். அதற்கு அவர், உமக்கு உள்ள சட்டமாவது, நீர் நாற்பது ரூபாய்க்கு ஒரு ரூபாய் வீதம் ஸக்காத் கொடுக்க வேண்டும் என்றார். அதற்கு அம்மனிதர், உமக்கு என்று நீங்கள் கூறியதற்கு என்ன பொருள்? ஸக்காத்தின் சட்டம் ஒவ்வொருவருக்காகவும் மாறிக் கொண்டா இருக்கும்? என்று கேட்டார். அதற்கு அவர், ஆம், உம்மிடம் நாற்பது ரூபாய் இருந்தால் அதில் ஒரு ரூபாயை ஸக்காத் ஆக கொடுப்பது உமக்கு அவசியமாகும். ஆனால், என்னிடம் நாற்பது ரூபாய் இருந்தால் 41 ரூபாய் கொடுப்பது எனக்கு கண்டிப்பதானதாகும். ஏனெனில் உம்முடைய அந்தஸ்து என்னவென்றால் அல்லாஹ் உங்களைப் பார்த்து உண்ணுங்கள் என்று கூறுகின்றான். ஆனால், அல்லாஹ் எனக்கு தந்திருக்கிற அந்தஸ்தானது எனது செலவுகளுக்கு அவனே பொறுப்பாளனாவான். நான் அறிவீனமாக 40 ரூபாயை சேர்த்து வைத்தால் அந்த 40 ரூபாயையும் கொடுத்து விட்டு ஒரு ரூபாய் அபராதமாகவும் கொடுப்பேன் என்றார்.'' (த.ஃப்ஸீரே கபீர் தொகுதி 7, பக்கம் 546) இதுவே பெரியவர்களின் நிலையாகும்.

சிலரது கடமை, மார்க்கத்திற்காக மட்டுமே அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களை அந்த வேலைக்காகவே படைத்துள்ளான். ஆனால் உலகிலுள்ள பிற மக்கள் சந்தேகமின்றி உலகை சம்பாதிக்கட்டும். பிறகு தமது பொருள், நேரம் ஆகியவற்றில் சில பங்கை இறை வணக்கம் மற்றும் மார்க்கப் பணிகளில் செலவிட வேண்டும். இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு கண்ணியமும், செல்வமும் பெயரும், புகழும் தந்தது முழுவதும் அல்லாஹ்வின் கருணையாகும். அந்த கருணைக்கான நன்றி

காட்டுதல் அதிலிருந்து செலவு செய்தவாறு மற்றவரையும் கவனத்தில் கொள்வதேயாகும். சிலரது உள்ளங்கள் அதிகமாக வியாபாரத்தனமாக இருக்கின்றன. அல்லது பிறரைப் பார்த்து அதே வேலையை தாமும் செய்கிறார்கள். அவை ஜமாஅத் நடைமுறைக்கு மாற்றமானவையாக இருக்கின்றன அல்லது இஸ்லாமிய போதனைக்கு ஏற்றவையாக இருப்பதில்லை. அத்தகைய மக்கள் பொறுப்பாளர்களிடமும் காணப்படுகின்றனர்.

சில வேளை உள்ளூர் அஞ்சுமன் கூட அத்தகைய முடிவை எடுக்கிறது. காதியானின் உள்ளூர் அஞ்சுமன் ஒருமுறை ஒரு படிவம் தயாரித்தது. அதனை பிற மக்களுக்கு ஒரு அனா அதாவது நான்கு பைசா என விற்க ஆரம்பித்தனர். அநேகமாக அது ஒரு அறிக்கைப் படிவம் (Report Form) போன்றதாக இருக்கலாம். இன்றும் சிலர் இதுபோன்ற புதுமைகளை உருவாக்க விரும்புகின்றனர். தமக்கென்று உள்ள நடைமுறைகளை மறந்து விடுகின்றனர். எவ்வாறிருப்பினும், அப்போது மக்களுக்கு முஸ்லிஹ் மவ்வூது எவ்வாறு புரிய வைத்தார்கள்? என்பதை எடுத்து வைக்கிறேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: "நான் ஜமாஅத் மக்களுக்கு போதனை செய்கிறேன். அவர்கள் தமது எல்லா பணிகளிலும் ஷரீஅத்தைப் பின்பற்ற வேண்டும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பின்பற்றுங்கள். சில நாட்களுக்கு முன் எனக்கு ஒரு தாள் தரப்பட்டது. நான் இவ்வளவு தான் பார்த்தேன். அதில் சில படிவங்களில் காணப்படுகின்ற முத்திரை இருந்தது. கூறுபவர்கள் இப்படிவம் ஒரு அனாவுக்கு விற்கப்படுவதாகக் கூறினர். நமது உள்ளூர் அஞ்சுமன் அதை வடிவமைத்ததாக தெரிய வந்தது. அவர்கள், அரசு ஸ்டாம்ப் பேப்பவர்களை பார்த்து நாமும் இதுபோன்ற விண்ணப்பங்களை தயாரித்து அதற்கு விலை நிர்ணயம் செய்யலாம் என்று எண்ணம் கொண்டனர்."

அவர்கள் கூறுகின்றார்கள்: "காகம் கொக்கின் நடையைப் பார்த்து அது போலவே தனது நடையை மறந்ததாம் என்று கூறுவார்கள். நான் இவ்வாறு கூறவில்லை. எனினும் நிச்சயமாக நான், கொக்கு காகத்தின் நடையைப் பார்த்து தனது நடையை மறந்து விட்டது என்று கூறுவேன். நாம் அவர்களை காப்பி அடிப்பதற்கு நமக்கு உலகியல் அரசாங்கத்துடன் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆகியோர் இதுபோன்ற படிவங்களை உருவாக்கவில்லை. பிறகு எதிரிகளுக்கு ஏதாவது கூற வாய்ப்பு தருவது எப்படி அறிவுடைமையாகும்? இதுபோன்ற செயலால் விஷயம் தெரியுமா? இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று இவர்களுக்கே தெரியவில்லை என ஆட்சேபனை செய்கின்றனர். அவப்பெயரோ இயக்கத்திற்கு ஏற்படுகிறது. உள்ளூர் கமிட்டியைச் சார்ந்தவர்களின் உதாரணம் முற்றிலும் இவ்வாறே இருக்கின்றது."

பிறகு அன்னார் ஓர் உதாரணத்தைக் கூறுகின்றார்கள்: "குர்தாஸ்பூரில் ஒரு வயோதிகர் வாழ்ந்து வந்தார். நல்ல உயரமாகவும் பெரிய தாடியும் வைத்திருந்தார். பிறர் செய்வதை அப்படியே செய்து காட்டுபவராக இருந்தார். அவர் யாராவது ஒரு நண்பரை தூரத்தில் பார்த்து விட்டால் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவதற்குப் பதில் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்று கூறுவார். அருகில் வந்து விட்டால் அவரது விரலைப் பிடித்துக் கெண்டு அல்லாஹு அக்பர் என்று கூறத் தொடங்குவார். அத்துடன் குதிக்கவும் செய்வார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திக்க அடிக்கடி வந்தார். அவருக்கு உள்ளூர் கமிட்டியின் President போன்று பிறரைப் பின்பற்றும் ஆர்வம் ஏற்பட்டது." மக்கள் பிறரைப் பார்த்து தாமும் அதே போல் செய்ய நினைத்து தவறான வேலைகளைச் செய்கின்றனர். அதற்காக உதாரணம் தருகின்றார்கள். "அவருக்கு பிறரைப் போன்று நடிக்கும் ஆர்வம் இருந்தது. அவர் ஏழையாக இருந்தார். அவர் கோர்ட்டில் எழுத்தராகப் பணியாற்றி வந்தார். கோர்ட்டில் நடக்கும் பணிகளைக் கேட்டு வந்திருந்தார். எனவே நாமும் மாஜிஸ்ட்ரேட் ஆக வேண்டும் என்று விரும்பினார். File மற்றும் Ledger –ஐ கொண்டு வருமாறு கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று விரும்பினார். அவரது ஆசை நிறைவேறாததால் வீட்டில் ஒரு வழிமுறையை மேற்கொண்டார். நிறைய File –களை உருவாக்கினார். உப்பிற்கு ஒரு File –ஐ உருவாக்கினார். அவ்வாறே நெய்யிற்கு ஒரு File –ஐ உருவாக்கினார். மிளகாயின் File –ஐயும், ஒரு விறகின் File –ஐயும் உருவாக்கி இருந்தார். வீட்டிற்கு வந்ததும் அவர் ஒரு மண்பானையை கவிழ்த்துப் போட்டு அதன் மீது உட்கார்ந்து கொள்வார். மனைவி உப்பு வேண்டும் என்பார். இவர் மனைவியைப் பார்த்து, ரீடர் இன்ன File –ஐ கொண்டு வாருங்கள் என்பார். மனைவி எடுத்துக் கொண்டு வருவார். அதனை படித்த பிறகு சிறிது நேரம் யோசித்து விட்டு, நன்றி, இதில் நமது கட்டளையினால் இவ்வளவு உப்பு தரப்படுகிறது என்று எழுதுங்கள் என்று கூறுவார். ஒரு நாள் அந்த அப்பாவியின் துரதிஷ்டம் கோர்ட்டில் அங்கு சில File –கள் களவு போய் விட்டது. விசாரனை தொடங்கியது. அவரது அண்டை வீட்டுக்காரர் அரசு வெகுமதி தருவதாக இருந்தால் நான் அதனைப் பற்றி துப்பு கொடுப்பேன் என்றார். சரி, சொல் என்று அவருக்கு கூறப்பட்டது. அவர் பக்கத்து வீட்டிலிருந்து இதுபற்றி பேச்சு நடப்பதை தினமும் கேட்டு விட்டு அந்த வயோதிகரின் பெயரை சொல்லி விட்டார். போலீஸ் காணாமற் போன எல்லா File –களின் எல்லா பரிவாரங்களுடன் அவர் வீட்டில் திரண்டு விட்டது. சோதனையிடத் தொடங்கினர். அங்கு File தேடிய போது உப்பின் File வெளிப்பட்டது. ஒரு பக்கம் நெய்யின் File வெளிப்பட்டது. சிறிது மிளகாயின் File –லும் வெளிப்பட்டது. இதே காட்சியைத் தான் நான் இங்கு பார்க்கிறேன் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நமது நண்பர்கள் மேற்கத்திய விஷயங்கள் மிகச் சிறந்தவை என்று கருதிக் கொண்டு அதனைப் போன்று செய்யத் தொடங்கி விடுகின்றனர்." (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 16, பக்கம் 229-230) அதற்கு தேவை என்ன என்று பார்ப்பதில்லை. ஆக, இங்கு ஒரு படிவம் அல்லது அதன் விலை பற்றி கேள்வியில்லை. ஒரு அடிப்படை விஷயம் என்னவென்றால் ஒரு விஷயம் நமது போதனை மற்றும் நமது நடைமுறைக்கு மாற்றமாக இருக்கும் எனில் அதிலிருந்து நாம் தப்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். உலகியல் விஷயங்களில் போன்று நாம் செய்ய வேண்டும் என்றாலும் முதலில் இது உலகியல் விவகாரம் காப்பியடித்தல் அல்ல. அடுத்து எந்த விஷயத்திலாவது காப்பியடிக்க வேண்டும் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் முன்மாதிரி என்று அல்லாஹ் கூறுகின்றான். அன்னாரைப் போன்றே செய்ய வேண்டும். அல்லது இக்காலத்தில் நமக்கு முன்மாதிரியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருக்கிறார்கள். அன்னார் தமது எஜமானரிடமிருந்து கற்று நமக்கு கூறியுள்ளார்கள். அதற்கேற்ப நாம் செல்ல வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவம் கூறுகின்றார்கள்: "எனக்கு நினைவு உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாழ்நாளின் கடைசி வருடம் அல்லது அவர்களுக்குப் பிறகு முதலாவது கிலாஃபத்தின் காலத்தில் வந்த ரமலானாக அது இருந்தது. எவ்வாறிருப்பினும், அது கோடைக்காலமாக இருந்தது. ளுஹர் வேளையில் தண்ணீர் குடிக்க முடியவில்லை. அதனால் நோன்பின் நேரத்தில் எனக்கு கடும் தாகம் ஏற்பட்டது. நான் சுயநினைவு இழந்து விடுவேன் என்ற பயம் ஏற்பட்டது. பகல் அஸ்தமிக்க இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. நான் முற்றிலும் இயலாதவனாகி ஒரு கட்டிலில் விழுந்தேன். அப்போது நான் ஆன்மீகக் காட்சியில் பார்த்தேன். ஒருவர் எனது வாயில் வெற்றிலையைப் போடுகிறார். நான் அதனை சுவைத்தேன். எனது தாகம் போய் விட்டது. அந்த நிலை மாறியதும் எனக்கு தாகத்தின் எந்த அடையாளமும் இல்லாமல் போய் விட்டது. அல்லாஹ் இம்முறையில் எனது தாகத்தைத் தணித்தான். தாகம் தீர்ந்ததும் தண்ணீர் குடிக்க தேவை ஏற்படவில்லை. தாகம் எடுக்கும் போது தானே தண்ணீர் தேவைப்படுகிறது. சுருக்கமாக, தேவை நிறைவேற்றித் தரப்படுகிறது. அது தேவையான பொருட்களை ஆயத்தம் செய்து தருவதன் மூலமோ அல்லது தேவையை விட்டும் தன்னிறைவை உருவாக்கி விடுவது மூலமோ அதன் தேவையே இல்லாமல் ஆகி விடுகிறது."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒரு மனிதர் இன்ன பெண்ணோடு எனக்கு திருமணம் நடைபெற வேண்டும். துஆ செய்யுங்கள் என்று எழுதினார். அன்னார் கூறினார்கள்: "நாம் துஆ செய்வோம். ஆனால் நிகாஹ் ஒரு நிபந்தனையல்ல. நிகாஹ் நடக்கலாம். அல்லது அவளிடம் உமக்கு வெறுப்பு ஏற்படலாம். அன்னார் துஆ செய்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு அவர் எழுதினார். எனது உள்ளத்தில் அவள் மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டது."

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது கூறுகிறார்கள்: "அதுபோன்று என்னிடமும் ஒரு மனிதர் அவ்வாறு எழுதினார். நானும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சுன்னத்தின்படி இதே பதிலைத்தான் எழுதினேன். அவர் பிறகு எனக்கு, அவரது உள்ளத்திலிருந்து அவளைப் பற்றிய எண்ணம் போய் விட்டது என்று தெரிவித்தார். எனவே, அல்லாஹ் இரு வழிகளில் உதவி செய்கிறான்." (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 342-343) அதாவது அசல் விஷயம் அவர் விரும்புவது நிறைவேறுகிறது அல்லது அவரது விருப்பமே உள்ளத்தில் இருந்து அழிந்து விடுகிறது. எனவே இதனை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு தான் அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும். அசல் விஷயம் அல்லாஹ்வின் திருப்தி மற்றும் அவனது தீர்ப்புக்கு முக்கியத்துவம் தந்தவாறு துஆ செய்வதாகும்.

இப்போதும் எனக்கும் அதுபோன்று கடிதம் எழுதுகின்றனர். இன்ன இடத்தில் நான் சம்பந்தம் செய்ய வேண்டும். இவர்களுடன் நடைபெற வேண்டும். துஆ செய்யுங்கள். அத்துடன் முயற்சியும் செய்யுங்கள். பெற்றோருக்கும் சொல்லுங்கள். அமைப்பிடமும் சொல்லுங்கள். இல்லா விட்டால் நானும் இறந்த விடுவேன். எதிர்புறத்திலும் மரணமே ஏற்படும் என்கின்றனர். இது வீணான விஷயமாகும். திருமணத்தின் அசல் நோக்கம் உள்ளத்தின் அமைதி, சந்ததிகள் நிலைக்கச் செய்தல் ஆகும். அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேட்க வேண்டும். அல்லாஹ்வின் பார்வையில் சிறந்ததாக இருந்தால் நடக்கட்டும். இல்லையென்றால் அது உள்ளத்தை விட்டு அகன்று விடட்டும். உலகத்தின் மீதுள்ள நேசங்களும் தற்காலிக நேசங்களாகும். உலக நேசத்தையும் கூட அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காகவே கேட்க வேண்டும். பிறகு இது நடக்கும் என்றால் பிறகு உலகியல் அன்பும் கூட நன்மையாகி விடும். பிறகு உள்ளத்தின் அமைதி மற்றும் நிறைவுக்கு அது காரணமாக அமையும்.

உலகில் எந்தப் பொருளும் தன்னளவில் நஷ்டம் விளைவிப்பதாக இல்லை என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

''விஷப்பழம் ஒன்று உள்ளது. அதனை உண்பதால் பலர் இறந்து போகின்றனர். ஆனால் இலட்சக்கணக்கானோர் அதிலிருந்து தப்பியும் விடுகின்றனர்.'' அதாவது சிகிச்சையாகயும் நிவாரணியாகவும் அது பயன்படுகிறது. ''அதுபோன்று மிகவும் அழிவைத் தரக்கூடிய பொருள் அபீன் ஆகும். ஆனால் இதன் தீமையுடன் ஒப்பிடுகையில் பயன் மிகவும் அதிகமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: மருத்துவர்களின் கூற்றின்படி மருத்துவத்தின் பாதி மருந்துகளில் அபீன் பயன்படுகிறது. அதன் பயனை மதிப்பிடுவதே சிரமமாகும். மனிதனுக்கு நிம்மதியின்மை ஏற்பட்டால், மனிதனது தூக்கம் போய் விட்டால் மனிதன் வயிறால் துடித்து தற்கொலை செய்ய முற்படும்போது அவருக்கு மார்ஃபியாவின் ஊசி போடப்படுகிறது. அவருக்கு உடனே நிம்மதி ஏற்படுகிறது. ஆகவே உலகில் எந்தப் பொருளும் சுயம் நஷ்டத்தை விளைவிப்பதில்லை. நஷ்டம் தரப்படும் பொருள் என்பது அதன் தவறான உபயோகமாகும். அது மனிதனின் தவறின் விளைவாக இருக்கிறது. எனவே ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நோயை தன் பக்கமாகவும் சுகத்தை இறைவன் பக்கமாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஆனால் நமது நாட்டில் ஒரு முஸ்லிம் இறைவனிடம் ஈமான் வைத்துக் கொண்டு ஒரு பணியில் தோல்வி அடைந்து விட்டால், நான் முழுமையாக முயற்சி செய்து விட்டேன். ஆனால் இறைவன் என்னை தோல்வி அடையச் செய்து விட்டான் என்கிறார். இவ்வாறு சிறப்பை தன் பக்கமும் தவறை இறைவன் பக்கமும் சுட்டிக் காட்டுகிறார்.'' (த.்ப்ஸீதே கபீர் தொகுதி 7, பக்கம் 169-170)

எனவே, எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உண்மையான முஃமீனின் பணி ஒரு பணியில் நல்ல விளைவு ஏற்பட்டால் அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் எனக்கு வெற்றியைத் தந்தான் என்று கூற வேண்டும். தீய விளைவு ஏற்பட்டால் اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ ஓத வேண்டும். நான் எனது தவறின் காரணத்தால் தோற்று விட்டேன் என்று கூற வேண்டும். அப்போது இறைவனிடமிருந்து அவருக்கு பரக்கத் கிடைக்கிறது. தவறை தன்னோடு தொடர்புபடுத்திக் கூற வேண்டும். வெற்றியின் போது அல்ஹம்துலில்லாஹ் கூற வேண்டும். அவ்வாறு கூறுபவர் மீது அல்லாஹ் பிறகு கருணை காட்டுகிறான். பிறகு கருணை காட்டியவாறு எனது அடியான் வெற்றி பெற்றால் என் பக்கம் சுட்டிக் காட்டுகிறான். எனவே நான் அவனுக்கு மேலும் வெற்றியை நல்குவோம் என்று கூறுகின்றான். சில சாதாரண விஷயங்கள் பெரிய விளைவை ஏற்படுத்துகின்றன.

இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஒரு குத்பாவில் இவ்வாறு கூறினார்கள்:

''ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து நான் கேட்டுள்ளேன். அன்னார் ஒரு பெண்ணின் கதையைக் கூறினார்கள். அவளுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் சண்டைக்கு சென்றான். அவன் தனது தாயிடம், நான் திரும்பி வரும்போது நீங்கள் மகிழ்ச்சி அடையும் விதத்தில் அன்பளிப்பாக கொண்டு வரத்தக்க ஒரு பொருளை கேளுங்கள் என்று கூறினான். தாயார், நீ நலமுடன் திரும்பி வந்தாலே எனக்கு மகிழ்ச்சி தான் என்று கூறினாள். மகன் அடம் பிடித்தார். நிச்சயமாக ஏதாவது ஒரு பொருளை கூறுங்கள் என்றார். அப்போது தாயார், எனக்காக ஏதாவது கொண்டு வரத்தான் வேண்டும் எனில் ரொட்டியின் கரிந்த துண்டுகளை எவ்வளவு கொண்டு வர முடியுமோ கொண்டு வா. அதனால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்று கூறினாள். அவன் இதனை ஒரு சாதாரண விஷயமாகக் கருதி வேறு ஏதாவது கேளுங்கள் என்றான். ஆனால் அந்தத் தாய் எனக்கு இது மட்டும் தான் மகிழ்ச்சி தர இயலும் என்று கூறி விட்டாள். நன்று என்று அவன் போய் விட்டான். அவன் ரொட்டியைச் சுடும் போது வேண்டுமென்றே அதனை கரித்தான். கரிந்த துண்டுகள் அதிகமாக சேருவதற்காக அவ்வாறு செய்தான். ரொட்டியின் ஒரு பகுதியை தான் உண்டு விட்டு கரிந்த துண்டுகளை ஒரு பையில் சேகரித்து வந்தான். சிறிது காலத்திற்குப் பிறகு வீடு திரும்பினான். கரிந்து துண்டுகள் நிறைந்த பைகளை தாயின் முன் வைத்தான். அதனைப் பார்த்து அவளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவன் கேட்டான். அம்மா தாங்கள் கூறியபடி செய்து விட்டேன். ஆனால் எதற்கு இது என்று தான் இன்னும் விளங்க வில்லை என்றாள். தாய் கூறினார். நீ செல்லும் போது கூறுவது பொருத்தமானதாக இருக்கவில்லை. அதனால் இப்போது கூறுகிறேன். பல நோய்கள் மனிதனுக்கு அரை வேக்காட்டு உணவை உண்பதால் ஏற்படுகிறது. நான் உன்னிடம் கரிந்த துண்டுகளை கொண்டு வரச் சொன்னேன். காரணம் அதற்காகவே நீ சிறு பகுதி கரிந்து விடும் அளவுக் சுடுவாய். கரிந்ததை வைத்து விட்டு மிச்சத்தை உண்பாய். அதனால் உனது உடல் நலம் நன்றாக இருக்கும். இந்த வகையில் அவ்வாறே நடந்தது.''

வெளிப்படையில் சின்னஞ்சிறிய விஷயம் தான். தாயான் மகனிடம் இதனை நேரடியாகக் கூறியிருந்தால் – ரொட்டியை நன்கு வேக விட்டு சாப்பிடு என்று கூறினால் மகன், நான் முட்டாள் அல்ல. இளைஞன். எப்படி வேகாத ரொட்டியை உண்பேன்? என்று பதில் கூறியிருப்பான். ஆனால் இக்காலத்தில் பெரும்பாலார் முட்டாள்தனம் செய்கின்றனர். வேகாத ரொட்டியை ரசித்து உண்கின்றனர். இவ்வாறு தாயாரின் இவ்விஷயம் மகனின் உடல் நலத்திற்கு காரணமானது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நான் இந்த முன்னுரையை கூறக் காரணம் நான் எனது குத்பாவின் பிற்பகுதியில் துஆ ஒப்புக் கொள்ளப்படுவது பற்றி கூறிவேன். சிலர் சின்னஞ்சிறிய விஷயமெல்லாம் கூறப்படுகிறது. இது தான் எங்களுக்கு முதலிலேயே தெரியும் என்று கருதுகின்றனர். ஆனால் அவர்கள் அதற்கேற்ப செயல்படுவதில்லை. அல்லாஹ் கூறுகின்றான்: துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்க இரு அடிப்படை நிபந்தனைகள் உள்ளது. அதனை நினைவில் கொள்ள வேண்டும். *ஃபல் யஸ்தஜிபூலி வல் யுஃமினூ பீ* – எனது சொல்லை ஏற்றுக் கொள்ளுங்கள். என் மீது ஈமான் கொள்ளுங்கள். இது தவிர பல விஷயங்கள் உள்ளன. தரூது ஓதுங்கள். ஸதக்கா கொடுங்கள். எவ்வாறிருப்பினும் இந்த இரு விஷயங்கள் திருக்குர்ஆனில் வருகின்றன. மக்கள் எங்களுக்கு தான் தெரியுமே என்கிறார்கள். ஆனால் அவர்கள் அதற்கேற்ப செயல்படுவதில்லை. சிலர் எழுதவும் செய்கின்றார்கள். நாங்கள் அதிகமாக துஆ செய்தோம். அல்லாஹ் எங்களது துஆவை ஏற்றுக் கொள்ளவில்லை. இது அல்லாஹ்வின் மீது சுமத்தப்படும் பழியாகும். இது ஈமானின் பலவீனமும் ஆகும்.

சில காலத்திற்கு முன் என்னிடம் ஒருவர் வந்தார். அதிகமாக துஆ செய்தேன். ஒப்புக்கொள்ளப்படவில்லை. என்ன காரணம்? என்றார். அவரிடம் நான், இதனையே கூறினேன். அல்லாஹ் கூறுகிறான்: *ஃபல் யஸ்தஜிபூலி* – எனது கட்டளையைக் கடைபிடியுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் அல்லாஹ்வின் எல்லா கட்டளையின்படியும் நடக்கிறீர்களா? என்று கேட்டேன். அதற்க அவர் இல்லை என்றார். பிறகு நாம் நமது நிலையைப் பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு செயல்படுகிறோம் என்பதை பார்க்க வேண்டும். பிறகு *யுஃமினூபி* என் மீது ஈமான் கொள்ளுங்கள் என்பதன்படியும் செயல்படுவதில்லை. அதனால் துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லை. துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று நினைக்கிறோம். ஏனெனில் வெளிப்படையாக நிறைவேறவில்லை. எனவே, ஈமான் பலவீனமாகி விட்டது. ஈமான் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய ஈமானாக இருக்க வேண்டும். அதுபற்றி முதலில் கூறப்பட்டு விட்டது. பலவீனத்தை நம்முடன் தொடர்புபடுத்திக் கூற வேண்டும். வெற்றியை இறைவனுடன் தொடர்புபடுத்திக் கூற வேண்டும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: இந்நிலை ஏற்படும் என்றால் எனது அடியான் என் மீது நம்பிக்கை வைத்துள்ளான். நான் அவனது துஆவை ஒப்புக் கொள்கிறான் என்றவாறு அல்லாஹ் துஆவை ஒப்புக் கொள்ளவும் செய்கிறான். அல்லாஹ் நமக்கு தனது கட்டளையின்படி நடப்பதற்கான வாய்ப்பினை வழங்கவானாக! நமது ஈமானை உறுதிப்படுத்துவானாக! நமது துஆவுக்கு ஒப்புக் கொள்ளப்படும் தகுதியை வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். இது கிளாஸ்கோவைச் சார்ந்த செய்யது அஸதுல் இஸ்லாம் ஷா சாஹிப் உடையதாகும். இவர் செய்யது நயீம் ஷா சாஹிபின் மகன் ஆவார். இவரது தந்தையும் தந்தை வழிப் பாட்டனாரும் பாரம்பரியமான குடும்பமாக இருந்தது. இவர் ஜமாஅத்திற்கு தொண்டு செய்யக்கூடியவர். 24 மார்ச் 2016 அன்று தமது 40–வது வயதில் விஷமிகளின் தாக்குதலால் மரணமடைந்து விட்டார். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

24 மார்ச் அன்று கிளாஸ்கோவிலுள்ள தமது கடைக்கு வெளியில் கடுமையான காயமுற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்டு அங்கிருந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். செல்லும் முன்பே இறந்து விட்டார். அஹ்மதியானதால் இவர் ஷஹீதாக்கப்பட்டார். உயிரை அர்ப்பணித்தார். ஷஹாதத்தின் பதவியைப் பெற்றார். பத்திரிகைகளும் அரசும் பெரும் இரங்கல் தெரிவித்துள்ளன. தீவிரவாதிகளை தடுப்பது அரசின் வேலை தான். இங்கு மலவிகளுக்கு சுதந்திரம் வழங்கி விட்டால் பிற முஸ்லிம் நாடுகளிலுள்ள குழப்பங்களை இங்கும் உருவாக்கி விடுவார்கள். பிப்ரவரி 1974 –ல் ரப்வாவில் பிறந்தார். FSc படிப்பை நுஸ்ரத் ஜஹான் அகாடமியில் பெற்றார். 1998 –ல் கிளாஸ்கோ வந்தார். தந்தையுடன் சேர்ந்து தொழில் செய்து வந்தார். வஸிய்யத்தும் செய்துள்ளார். சந்தாவும் முறைப்படி கொடுத்து வந்தார். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் அறிக்கையின்படி இவர் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் இணைந்திருந்தார். இஜ்திமாக்களில் கலந்து கொண்டார். சந்தா கொடுத்து வந்தார். ஜுமுஆ தொழுகைக்கு முறையாக வருவார். பெரும்பலான இஜ்திமாக்களில் பங்கெடுத்துள்ளார்.

மர்ஹூம் டாக்டர் நஸீருத்தீன் சாஹிப் கமர் பென்ஷனர் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் அவர்களின் மருமகன் ஆவார். இவருக்கு சிறிது காலமாகவே மனநோய் இருந்து வந்தது. அதன் காரணமாக சற்று விலகியே இருந்தார். ஆனால் கடைசியாக மண்டல அமீர் சாஹிப் இவரை சந்தித்த போது இவர் கிலாஃபத்துடன் தொடர்பு இருப்பதாக தெளிவுபடுத்தினார். இவர்

ஜமாஅத்தை விட்டு விட்டதாக சிலர் தவறாகக் கருதி இருந்தனர். ஆனால் அவ்வாறு இல்லை. அஹ்மதியாகவே இருந்தார். அஹ்மதிய்யத்தின் காரணமாகத்தான் ஷஹீது ஆனார். தொடர்ந்து முறையாக ஜமாஅத் நிகழ்ச்சிகளிலும் குத்தாமுல் அஹ்மதிய்யா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

கபாபீரைச் சார்ந்த முரப்பி ஷம்சுத்தீன் சாஹிப் எழுதுகிறார்: அஸது கான் சாஹிபின் மனைவி தய்யிபா சாஹிபா காதியானுடன் தொடர்புடையவர். ஷம்சுதீன் சாஹிபின் மனைவியின் தந்தையின் சகோதரனின் மகளாவார். அவர் கூறுகிறார்: சில வருடங்களுக்கு முன் இருமுறை அவரது வீட்டிற்குச் செல்லும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஓர் இரவு தங்கும் வாய்ப்பும் கிடைத்தது. இருமுறையும் அவர் என்னிடம் ஜமாஅத் விவகாரங்கள் மற்றும் தப்லீக் விவரங்களையே கேட்டார். அது தவிர எந்த உலகியல் பேச்சும் பேசவில்லை. இரு முறையும் இரவில் அவரை நான் தஹஜ்ஜுத் தொழுபவராகக் கண்டேன்.

அல்லாஹ் இவரை மன்னிப்பானாக! இவரது உறவினர்கள் மற்றும் பெற்றோர்கள் மற்றும் மனைவிக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! நான் கூறியது போன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன்.

## வஃபாத் அறிவிப்பு

*சங்கரன்கோவில் ஜமாஅத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய K.M. இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் 26.04.2016 அன்று தனது 76 -வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள்.* إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

*மர்ஹூம் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் 14.11.1940 -ஆம் ஆண்டு பிறந்தார்கள். அன்னார் தனது 20 -வது வயதில்* Supervisor Regulated Market Govt. of Tamil Nadu *-ல் அரசு ஊழியராகப் பணியமர்த்தப் -பட்டார்கள். நீதி, நேர்மையுடன் 38 ஆண்டுகள் பணி செய்து 1998 -ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றார்கள்.*

*அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை அவர்கள் கேள்விப்பட்ட பின் அதை அறிந்து கொள்ள ஆர்வத்துடனும், துடிப்புடனும் செயல்பட்டார்கள். மேலும், நன்கு ஆராய்ந்து பல இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் உள்ளாகி உள்ளூர் மக்களால் ஊர் நீக்கம் செய்யப்பட்ட போதும் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தை ஏற்பதில் அவர்கள் எவ்வித கஷ்டத்தையும் உணரவில்லை.*

*தனது 29 -வது வயதில் அதாவது 1969 -ஆம் ஆண்டு மே மாதம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார்கள். ஆரம்ப கால அஹ்மதிகளில் ஒருவாராவார்கள். சங்கரன்கோயில் ஜமாஅத்தின் தலைவராக நீண்ட காலங்கள் தொண்டாற்றியுள்ளார்கள். இறுதி மூச்சு வரை ஜமாஅத் அமைப்பிற்கும், காலத்தின் கலீஃபாவுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர் -களாகத் திகழ்ந்தார்கள்.*

*2008 -ஆம் ஆண்டு சென்னைக்கு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வருகை தந்த போது அன்னாரைச் சந்திக்கும் நற்பேற்றைப் பெற்றார்கள்.*

*ஏழை எளியவர்களிடமும், அண்டை அயலார்களிடமும் நல்ல முறையில் நடந்து கொள்வது அன்னாரின் சிறப்பம்சமாக இருந்தது. பல்வேறு நற்பண்புகளைக் கொண்டவராக விளங்கினார்கள்.*

*அன்னார் தனக்குப் பின்னால் மனைவி மற்றும் 3 மகன்களையும், 2 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரது இழப்பால் ஆழ்ந்த துக்கத்தில் இருக்கின்ற அவர்களது மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு பத்ர் பத்திரிகை சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*அல்லாஹ் மர்ஹூம் அவர்களின் அந்தஸ்தை உயர்த்து -வானாக! அவர்களுடைய பாவங்களை மன்னித்தருள்வானாக! மேலும், அன்னாரின் குடும்பத்தினருக்கு பொறுமையை வழங்கும் நல்வாய்ப்பையும், அன்னார் விட்டுச் சென்ற நற்செயல்களைத் தொடர்ந்து செய்யக்கூடிய நல்வாய்ப்பையும் வழங்குவானாக!*

*இப்படிக்கு*
*ஆசிரியர்*
*பத்ர் வாரப் பத்திரிகை*

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

மிக்க இறைவன் இருக்கின்றான் என்பதற்கான ஏதாவது ஓர் உறுதியான சான்று அவர்களை குற்றப்படுத்திக் கொண்டிருந்தால் பிறகு அவர்கள் மிகவும் வெட்கமில்லாமலும், கோபத்துடனும், பரிகாசம் செய்தவாறும் இறைவனின் இருப்பை மறுக்கக் கூடியவர்களாக ஆகியிருக்க மாட்டார்கள். எந்த நபரும் தத்துவவாதிகளின் கப்பலில் அமர்ந்தவாறு சந்தேகங்களின் புயலிலிருந்து இரட்சிப்பைப் பெற முடியாது. மாறாக, கண்டிப்பாக அவர் மூழ்கி விடுவார். கலப்பற்ற ஏகத்துவத்தின் பானம் ஒருபோதும் அவருக்கு கிடைக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஊடகமாகக் கொள்ளாமல் ஏகத்துவத்தைப் பெற முடியும். அதன் மூலமாக மனிதன் இரட்சிப்பைப் பெற முடியும் என்ற எண்ணம் எந்த அளவு பொய்யானதும் துர்நாற்றம் உடையதாகவும் இருக்கின்றது என்று இப்போது சிந்தனை செய்யுங்கள்.

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? உறுதியான தவ்ஹீது, நபியின் மூலமாக மட்டும்தான் கிடைக்க முடியும் என்பதை உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள். இவ்வாறு நமது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர்களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். இப்போது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாகவும் முழுமையாகவும் பின்பற்றுபவர்கள் இந்த அடையாளங்களை நாத்திகர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றனர். உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். இந்தத் தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. நபியின் மூலமாக வெளிப்படுகின்ற அந்த வலுவான அடையாளம் இறைவனின் இருப்பையும் ஏகத்துவத்தையும் நிரூபிப்பது போன்றே இறைவனின் கம்பீரமான மற்றும் மென்மையான பண்புகளை முழுமையாகவும் நிறைவாகவும் நிரூபித்து, அவனது மகத்துவத்தையும் அன்பையும் உள்ளங்களில் அமரச் செய்கின்றது. வலுவான மற்றும் இறை வல்லமையை வெளிப்படுத்துகின்ற முன்னறிவிப்புகள் அடங்கியுள்ள இந்த அடையாளங்கள் மூலமாக இறைவனின் இருப்பு, ஏகத்துவம் அந்த இறைவனின் கம்பீரமான மற்றும் மென்மையான பண்புகள் ஆகியவற்றின் மீது உறுதி ஏற்படும் போது மனிதன் இறைவனை அவனது இருப்பு மற்றும் அனைத்து பண்புகளிலும் தனித்தவனாகவும் இணையற்றவனாகவும் அறிவது அதன் கட்டாய விளைவாக இருக்கின்றது. மேலும் மனிதன் அந்த இறைவனின் சிறப்புகளையும் அவனது ஆன்மீக அழகையும் பொலிவையும் பார்த்து அவனது அன்பில் தன்னை மாய்த்து விடுகின்றான். பிறகு அவனது மகத்துவம், தன்னிறைவு பெற்ற தன்மை ஆகியவற்றின் மீது தனது பார்வையைச் செலுத்தி அவனுக்கு அஞ்சுகின்றான். இப்போது ஒவ்வொரு நாளும் இறைவன் பக்கம் அவன் ஈர்க்கப்படுகின்றான். எதுவரையென்றால் எல்லா விதமான கீழ் நிலையிலுள்ள தொடர்புகளையும் முறித்து விட்டு அவனது ஆன்மா மட்டுமே எஞ்சியிருக்கின்றது. அவனது நெஞ்சத்தின் முற்றம் முழுவதுமாக இறைவன் மீதுள்ள அன்பில் நிறைந்து விடுகின்றது. இறைவனின் இருப்பைக் காண்பதன் மூலமாக அவன் மீது ஒரு மரணம் வந்து விடுகின்றது. அவன் அந்த மரணத்திற்குப் பிறகு ஒரு புதிய வாழ்வைப் பெறுகின்றான். தன்னையே இழந்து விடுகின்ற இந்த நிலைமையில்தான் அவனுக்கு தவ்ஹீது கிடைத்து விட்டது என்று கூறப்படுகின்றது. எனவே, நாம் எழுதியிருப்பது போன்றே இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Vol. 1 | Thursday 5 MAY 2016 | Issue No. 9

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# கிலாஃபத்தின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம்

**மதிப்பிற்குரிய மவ்லானா குலாம் நபி சாஹிப் நியாஸ், காஷ்மீர் மாநிலப் பொறுப்புப் பிரச்சாரகர்**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக உண்மையான மார்க்கத்தை நிலைநாட்டினான். அதை முழுமை -யாக்கினான். முழுமைப்படுத்தியது மட்டுமல்லாமல் அதைப் பாதுகாப்பதற்கான வாக்குறுதியையும் வழங்கியுள்ளான்.

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

(குர்ஆனாகிய) இந்த அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம். *(15:10)* மேலும் அல்லாஹ், எதுவரை முஸ்லிம்கள் ஈமானிலும் நற்செயல்களிலும் நிலைத்திருப்பார்களோ அதுவரை அல்லாஹ் அவர்களிடம் கிலாஃபத்தை நிலைத்திருக்கச் செய்வதாக பெருமானார் (ஸல்) அவர்களிடம் வாக்குறுதி வழங்கியுள்ளான். இதைப் பற்றி திருக்குர்ஆனின் இஸ்திக்லாஃப் வசனத்தில் *(24:56)* அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அதாவது, அல்லாஹ் நன்னம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்களிடம் அவர்களுக்கு முன்னுள்ள மக்களிடம் கிலாஃபத்தை ஏற்படுத்தியது போன்று கிலாஃபத்தை நிலைநாட்டுவதாக மக்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். பிறகு அவர்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க்கத்தில் அதாவது இஸ்லாத்தில் அவர்களை உறுதியாக நிலைபெறச் செய்வான். அதை வலுப்பெறச் செய்வான். அவர்களது அச்சத்தை அமைதியாக மாற்றுவான். அதன் மூலமாக மக்கள் அல்லாஹ்வை மட்டும் வணங்குவர். அவர்கள் அவனுடன் வேறு எவரையும் இணையாக்க மாட்டார்கள். இந்த கிலாஃபத் அமைப்பிற்கு கண்ணியம் வழங்காதவர்கள் கட்டுப்படாதவர்களாகவும் குழப்பவாதிகளாகவும் இருக்கின்றனர். *(24:56)*

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உம்மத்தில் அவர்களுக்கு பிறகு மிகப்பெரும் அருளான கிலாஃபத்தை நிலைநாட்டுவதாக வாக்குறுதி வழங்கியுள்ளான். எனவே, கிலாஃபத் நபித்துவத்தை நிறைவுபெறச் செய்யக்கூடியதாக இருக்கின்றது. எனவேதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் مَا كَانَتِ النُّبُوَّةُ قَطُّ إِلَّا تَبِعَتْهَا خِلَافَةٌ அதாவது நபித்துவத்திற்கு பிறகு கிலாஃபத் இருக்க வேண்டியது அவசியமானதாகும் (கன்ஸுல் உம்மால்) என்று கூறியுள்ளார்கள். இந்த இரண்டுமே அதாவது நபித்துவமும் கிலாஃபத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையும் பிரிக்க முடியாதவையும் ஆகும். கண்ணியத்திற்குரிய நபிமார்கள் விதையை மட்டுமே விதைக்கின்றனர். இந்த விதையை கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள், எவ்வாறு விவசாயிகள் தங்களது வயல்களிலும் தோட்டங்களிலும் விதைகளைத் தூவுகின்றனரோ, செடிகளை நடுகின்றனரோ பிறகு அவற்றை பாதுகாப்பதற்கான ஏற்பாட்டையும் செய்கின்றனரோ அதற்கேற்பவே அவர்களின் வயல் அதன் முழுமையை அடைகின்றது. அல்லாஹ் ஏகத்துவத்தின் விதையை நபிமார்கள் மூலமாக விதைத்து விட்டு அதை கண்காணிப்பவரையும் பாதுகாப்பவரையும் அவன் நியமிக்காமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாகும்?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்களா:

இவ்வாறு அல்லாஹ் வலுவான அடையாளங்கள் மூலமாக அவர்களின் உண்மையை வெளிப்படுத்துகின்றான். எந்த உண்மையை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றனரோ அதற்கான விதையை அவர்களது கைகள் மூலமாகவே நடுகின்றான். ஆனால், அதனை அவர்களது கைகள் மூலமாக முழுமையாக நிறைவடையச் செய்வதில்லை. வெளிப்படையாகப் பார்க்கும்போது ஒரு தோல்விக்கான அச்சத்தை தன்னகத்தே கொண்டுள்ள அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்களை மரணிக்கச் செய்து எதிரிகளுக்கு எள்ளி நகையாடி பரிகாசம் செய்வதற்கும், இழிவாகப் பேசுவதற்குமான சந்தர்ப்பத்தை வழங்கி விடுகின்றான். அவர்கள் எள்ளி நகையாடி பரிகாசம் செய்த பிறகு, அவன் மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையைக் காட்டுகின்றான். மேலும், எத்தகைய காரணிகளை உருவாக்கி விடுகின்றான் என்றால் அதன் மூலமாக எந்த நோக்கங்கள் முழுமையடையாமல் இருந்தனவோ அவை தனது முழுமையை அடைந்து விடுகின்றன. (அல் வஸிய்யத்)

எனவே, நபித்துவத்தின் மகத்தான, மகத்துவம் நிறைந்த நோக்கங்களை நிறைவடையச் செய்வதற்காக நபித்துவத்தின் பிரதிநிதித்துவமாக விளங்குகின்ற அதாவது, கிலாஃபத் இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். கிலாஃபத்தின் மூலமாகவே மார்க்கத்தை வலுப்படுத்துவது, நம்பிக்கையாளர்களை ஒன்றிணைப்பது மற்றும் அவர்களிடம் உறுதித் தன்மையையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவது சாத்தியமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கீழ்க்காணும் ஹதீஸ் இதற்கான சிறந்த வழிகாட்டலாக இருக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் அர்பாஸ் பின் ஸாரியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அறிவுரையை வழங்கினார்கள். அதைக் கேட்டவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. உள்ளங்களில் அசைவு ஏற்பட்டது. ஒரு நபித்தோழர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது பிரியா விடை கொடுப்பவரது அறிவுரை போன்று தெரிகிறதே என்று கூறினார். அந்த நபித்தோழர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களுக்கு வஸிய்யத்தாக ஏதாவது கூறுங்கள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது எனது வஸிய்யத்தாகும். அதாவது, அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை மேற்கொள்ளுங்கள். கேட்பதையும் கட்டுப்பட்டு நடப்பதையும் உங்களது வழிமுறையாக ஆக்கிக் கொள்ளுங்கள். அதாவது, உங்களது கண்காணிப்பவராக யார் நியமிக்கப் -படட்டாலும் இமாம் அல்லது கலீஃபாவாக யார் தேர்ந்தெடுக்கப் -பட்டாலும் அவருக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடங்கள். அப்படிப்பட்டவர் ஆப்பிரிக்க அடிமையாக இருந்தாலும் சரியே! நினைவில் கொள்ளுங்கள்! எனக்குப் பிறகு உயிருடன் இருப்பவர்கள் பல கருத்து வேறுபாடுகளையும் பார்ப்பார்கள். எனவே, எனது நடைமுறையையும் எனது நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் நடைமுறையையும் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். முழுமையாக அதனைப் பின்பற்றுங்கள். வலுவாக அதில் நிலைத்திருங்கள். புதிய புதிய விஷயங்களிலிருந்து தவிர்ந்திருங்கள். ஏனென்றால், ஒவ்வொரு புதிய விஷயமும் பித்அத் (மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவை) ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். *(மிஷ்காத்துல் மஸாஃபீஹ்)* (தொடரும்)

## சகோதரர்களின் கவனத்திற்கு...

அல்லாஹ்வின் மாபெரும் அருளால் பத்ர் பத்திரிகையின் தமிழ் வெளியீடு தங்களை வந்தடைந்து கொண்டிருக்கும் என்று நம்புகிறோம். தமிழ் பத்ர் பத்திரிகை இதுவரை கிடைக்காத சகோதரர்கள் அல்லது தங்களது முகவரியில் மாற்றம் இருப்பின் கீழ்க்கண்ட கைபேசி எண்களை தொடர்பு கொள்ளுங்கள்.

மவ்லவி M. ரஃபீக் அஹ்மது - **9944803650**
மவ்லவி A. கலீல் அஹ்மது - **9952712731**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad